Chennai Metro Rail Limited

# சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்

செய்தி வெளியீடு
09-09-2009

## சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமைப் பொது மேலாளராக திரு. வி. சோமசுந்தரம் பொறுப்பேற்பு

திரு. வி. சோமசுந்தரம் அவர்கள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமைப் பொது மேலாளராக 7.9.2009 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

கட்டிடப் பொறியியல் பட்டதாரியான இவர் 1974 ஆம் ஆண்டு இந்திய இரயில் பொறியாளர் (IRSE) பணியில் சேர்ந்து, தென்கிழக்கு இரயில் புவனேஸ்வரில் தலைமை திட்ட மேலாளராகவும், தென்னக இரயில்வே பெங்களூரில் தலைமைப் பொறியாளராகவும் (கட்டுமானம்), சென்னை துரித இரயில் போக்குவரத்துக் கட்டமைப்பில் தலைமை திட்ட மேலாளராகவும், கிழக்கு கடற்கரை இரயில்வேயில் தலைமை நிர்வாக அலுவலராகவும், தென்னக இரயில்வேயில் தலைமை நிர்வாக அலுவலராகவும், முதன்மை தலைமை பொறியாளராகவும் பல்வேறு முக்கிய பதவிகளில் பணியாற்றியுள்ளார். மேலும், இங்கிலாந்து, ஸ்வீடன் மற்றும் ஜப்பான் நாட்டு இரயில்வேயில் பயிற்சி பெற்றுள்ளார்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமைப் பொது மேலாளராக பொறுப்பேற்பதற்கு முன்பாக திரு. வி. சோமசுந்தரம் அவர்கள் சென்னையில் டெல்லி மெட்ரோ இரயில் கழகத்தின் திட்ட இயக்குநராக பணியாற்றி வந்தார்.

KSKrishnamurthy

(எஸ்.கிருஷ்ணமூர்த்தி)
தலைமை மக்கள் தொடர்பு அலுவலர்